Crl.Misc/ 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
VALANGAIMAN

Calendar
Miscellaneous
Preliminary Register

**Case No. CC. 01/2025**

Deposition of **PW- 2 LW -2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ரமேஷ் | Father Name | : | சின்னையன் |
| Village | : | கோவிந்தகுடி | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | கூலி வேலை |
| Religion | : | | Age | : | 56 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 18th day of August 2025.

எதிரிகள் ஆஜர் . எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**முதல் விசாரணை-**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா. 1 எனது மகனாவார். ஆஜர் எதிரிகளை தெரியும். எனது பக்கத்து வீட்டுக்காரர்கள் ஆவார். கடந்த 18.06.2024ம் தேதி மாலை 05.00-06.30 மணியளவில் மழைப் பெய்து கொண்டிருந்தது, அதனால் எங்கள் வீட்டுக் கொல்லைப்புரம் உள்ள வைக்கோல் போருக்கு நானும் எனது மகனும் படுதா போட்டு மூடினோம். அப்போது ஆஜர் 1வது எதிரி மது போதையில் குச்சிகாரி மகனே தேவுடியா மகனே என்று எங்களை திட்டினார். நான் வைக்கோல் போரின் மேல் நின்று படுதா போட்டுக்கொண்டிருந்தேன், அப்போது விக்னேஷ் கல்லால் என்னை அடித்தார். நான் வைக்கோல் போர் மேலிருந்து கீழே இறங்கிவிட்டேன். எனது மகன் அ.சா.1 யாரை பேசுகிறீர்கள் என்று கேட்டார். அப்போது ஆஜர் 1வது எதிரி தெருபக்கம் சென்ற எனது மகனை பாரையால் குத்த வந்தபோது எனது மகன் கையால் தடுத்துள்ளார்,

அதில் அவருக்கு வலது கையில் காயம் ஏற்பட்டது. நான் உடனே 100க்கு போன் செய்தேன். அரைமணி நேரம் கழித்து போலீசார் வந்தார்கள், அப்போது நன்றாக மழை பெய்தது. இரண்டாவது எதிரி ரவி ஒரு பத்து நபர்களுடன் வந்து வீட்டில் உட்கார்ந்திருந்த எங்களை ஜாதி பெயர் சொல்லி திட்டி அடித்தார். அதில் எங்கள் வீட்டு பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு காயம் ஏற்பட்டது. சம்பவ இடத்திற்கு மீண்டும் நான்கைந்து போலீசார் வரவும் எதிரிகள் சம்பவயிடத்தை விட்டு சென்று விட்டார்கள். காயம் பட்ட எனது மகனை கும்பகோணம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம். எதிரிகள் கர்ப்பமாக இருந்த எனது மருமகள் அனுசுயாவையும் தாக்கினார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை - .**

எனது வீடும் ஆஜர் எதிரிகளின் வீடும் பக்கத்து பக்கத்து வீடுகள் என்றால் சரிதான். எனக்கும் ஆஜர் எதிரிகளுக்கும் இடையே சந்து பிரச்சனை உள்ளது என்றால் சரிதான். ஆஜர் எதிரிகள் மேற்படி சந்தை ஒட்டி ஆஜர் எதிரிகளின் மாட்டுக்கொட்டகை உள்ளது என்றால் சரிதான். எனது வீடு முடியும் இடத்திலிருந்து 50 அடி தூரத்தில் எனது வைக்கோல் போர் உள்ளது என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் கூறியுள்ள "எங்கள் வீட்டுக் கொல்லைப்புரம் உள்ள வைக்கோல் போருக்கு நானும் எனது மகனும் படுதா போட்டு மூடினோம். அப்போது ஆஜர் 1வது எதிரி மது போதையில் குச்சிகாரி மகனே தேவுடியா மகனே என்று எங்களை திட்டினார். நான் வைக்கோல் போரின் மேல் நின்று படுதா போட்டுக்கொண்டிருந்தேன், அப்போது விக்னேஷ் கல்லால் என்னை அடித்தார். நான் வைக்கோல் போர் மேலிருந்து கீழே இறங்கிவிட்டேன். எனது மகன் அ.சா.1 யாரை பேசுகிறீர்கள் என்று கேட்டார். அப்போது ஆஜர் 1வது எதிரி தெருபக்கம் சென்ற எனது மகனை பாரையால் குத்த வந்தபோது எனது மகன் கையால் தடுத்துள்ளார், அதில் அவருக்கு வலது கையில் காயம் ஏற்பட்டது. நான் உடனே 100க்கு போன் செய்தேன். அரைமணி நேரம் கழித்து போலீசார் வந்தார்கள், அப்போது நன்றாக மழை பெய்தது. இரண்டாவது எதிரி ரவி ஒரு பத்து நபர்களுடன் வந்து வீட்டில் உட்கார்ந்திருந்த எங்களை ஜாதி பெயர் சொல்லி திட்டி அடித்தார். அதில் எங்கள்

வீட்டு பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு காயம் ஏற்பட்டது. சம்பவ இடத்திற்கு மீண்டும் நான்கைந்து போலீசார் வரவும் எதிரிகள் சம்பவயிடத்தை விட்டு சென்று விட்டார்கள். காயம் பட்ட எனது மகனை கும்பகோணம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம். எதிரிகள் கர்ப்பமாக இருந்த எனது மருமகள் அனுசுயாவையும் தாக்கினார்", என்று என்னை போலீசார் விசாரணை செய்தபோது கூறவில்லை என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் கூறியுள்ளதுபோது எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. மேற்படி சம்பவத்தின் போது வைக்கோல் போரின் மேலுள்ள கட்டை விழுந்து அ.சா.1க்கு ஏற்பட்ட காயத்தை எதிரிகளுக்கும் எங்களுக்கும் உள்ள முன்விரோதம் காரணமாக மேற்படி காயத்தை எதிரிகள் தாக்கியதால் ஏற்பட்ட காயம் என்று வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1 எனது மகன் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2025.08.18 18:46:32 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வலங்கைமான்.

Crl.Misc/ 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE VALANGAIMAN

Calendar
Miscellaneous
Preliminary Register

**Case No. CC. 01/2025**

Deposition of **PW- 3 LW -** 4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ஜமுனா | Husband Name | : | ரமேஷ் |
| Village | : | கோவிந்தகுடி | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | வீட்டுக்குடித்தனம் |
| Religion | : | | Age | : | 55 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 18th day of August 2025.

எதிரிகள் ஆஜர் . எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

<u>முதல் விசாரணை-</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். அ.சா.1 எனது மகனாவார். அ.சா.2 எனது கணவராவார். ஆஜர் எதிரிகளை தெரியும், எனது பக்கத்து வீட்டுக்காரர்கள் ஆவார். கடந்த 18.06.2024ம் தேதி மாலை 05.00 மணிக்கு மேல் எனது கணவரும் எனது மகனும் மழை வருவது போல இருந்ததால் எங்கள் வீட்டு பின்புறம் உள்ள வைக்கோல் போரை படுதா போட்டு மூடுவதற்காக சென்றார்கள். பின்னர் வைக்கோல் போரை படுதா போட்டு மூடும் போது ஆஜர் 1வது எதிரி விக்னேஷ் எனது கணவரையும் மகனையும் தகாத வார்த்தைகளால் பேசி கல்லால் அடித்துள்ளார். ஆஜர் 1வது எதிரி பாரையை எடுத்துக்கொண்டு வந்து எனது மகனை குத்தவந்தார். அதை தடுத்த எனது மகனுக்கு அவரது இடது கையில் காயம் ஏற்பட்டது. சண்டைக் குறித்து போலீஸ் எண் 100 க்கு தகவல் கொடுத்தேன்.

தகவலை பெற்று போலீசார் ஒருவர் சம்பவயிடத்திற்கு வந்தார். ஆஜர் எதிரிகள் 20 நபர்களை அழைத்துக்கொண்டு கூட்டமாக வந்து போலீசார் எப்படி வந்து எங்கள் வீட்டை பார்க்கலாம் என்று சொல்லி மீண்டும் எங்களிடம் ஆஜர் எதிரிகள் பிரச்சனை செய்தார்கள். நானும் எனது மகள்கள் மற்றும் எனது மருமகள் அனுசுயா எல்லோரும் இருந்தோம். ஆஜர் எதிரியுடன் வந்தவர்கள் கர்ப்பமாக இருந்த எனது மருமகள் அனுசுயாவையும் தாக்கி விட்டார்கள். அப்போது எங்கள் தெருவில் மின்விளக்கு எரியாததால் யார் அடித்தார்கள் என்று தெரியவில்லை. மயக்கமடைந்த எனது மருமகள் அனுசுயாவையும் காயம் பட்ட எனது மகனையும் கும்பகோணம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம். நாங்கள் மருத்துவமனைக்கு சென்ற பின்பு சம்பவ இடத்திற்கு நிறைய போலீசார் வந்துள்ளார்கள். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

நான் முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள விபரங்களை போலீசார் விசாரணையில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நான் எனது முதல் விசாரணையில் கூறியுள்ள, "எனது கணவரும் எனது மகனும் மழை வருவது போல இருந்ததால் எங்கள் வீட்டு பின்புறம் உள்ள வைக்கோல் போரை படுதா போட்டு மூடுவதற்காக சென்றார்கள். பின்னர் வைக்கோல் போரை படுதா போட்டு மூடும் போது ஆஜர் 1வது எதிரி விக்னேஷ் எனது கணவரையும் மகனையும் தகாத வார்த்தைகளால் பேசி கல்லால் அடித்துள்ளார். ஆஜர் 1வது எதிரி பாரையை எடுத்துக்கொண்டு வந்து எனது மகனை குத்தவந்தார். அதை தடுத்த எனது மகனுக்கு அவரது இடது கையில் காயம் ஏற்பட்டது. சண்டைக் குறித்து போலீஸ் எண் 100 க்கு தகவல் கொடுத்தேன். தகவலை பெற்று போலீசார் ஒருவர் சம்பவயிடத்திற்கு வந்தார். ஆஜர் எதிரிகள் 20 நபர்களை அழைத்துக்கொண்டு கூட்டமாக வந்து போலீசார் எப்படி வந்து எங்கள் வீட்டை பார்க்கலாம் என்று சொல்லி மீண்டும் எங்களிடம் ஆஜர் எதிரிகள் பிரச்சனை செய்தார்கள். நானும் எனது மகள்கள் மற்றும் எனது மருமகள் அனுசுயா எல்லோரும் இருந்தோம். ஆஜர் எதிரியுடன் வந்தவர்கள்

கர்ப்பமாக இருந்த எனது மருமகள் அனுசுயாவையும் தாக்கி விட்டார்கள். அப்போது எங்கள் தெருவில் மின்விளக்கு எரியாததால் யார் அடித்தார்கள் என்று தெரியவில்லை. மயக்கமடைந்த எனது மருமகள் அனுசுயாவையும் காயம் பட்ட எனது மகனையும் கும்பகோணம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம். நாங்கள் மருத்துவமனைக்கு சென்ற பின்பு சம்பவ இடத்திற்கு நிறைய போலீசார் வந்துள்ளார்கள்" என்று எனது போலீசார் விசாரணையில் கூறவில்லை என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் கூறியுள்ளதுபோது எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. மேற்படி சம்பவத்தின் போது வைக்கோல் போரின் மேலுள்ள கட்டை விழுந்து அ.சா.1க்கு ஏற்பட்ட காயத்தை எதிரிகளுக்கும் எங்களுக்கும் உள்ள முன்விரோதம் காரணமாக மேற்படி காயத்தை எதிரிகள் தாக்கியதால் ஏற்பட்ட காயம் என்று வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1 எனது மகன் என்பதாலும் பட்டியல் சாட்சி 3 எனது மருமகள் என்பதாலும் அவர்களுக்கு எதிரிகள் தாக்கி காயம் ஏற்பட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2025.08.18 18:46:46 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வலங்கைமான்.